**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF : Judicial Magistrate, Thuraiyur.
Case No. : CC.17 of 2021
Prosecution Witness : PW2

11.08.2025.

| | | | |
|---|---|---|---|
| Name | : மாரிமுத்து | Calling | : மெடிக்கல் Rep. |
| Father Name | : கணேசன் | Religion | : |
| Village | : செவந்தாம்பட்டி | Age | : 40 |
| Taluk | : முசிறி | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

1 வது எதிரி ஆஜரில்லை. 2 வது எதிரி ஆஜர். மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது செவந்தாம்பட்டியில் குடியிருந்து மெடிக்கல் Rep. ஆகவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. 1 வது எதிரியை தெரியும். அ.சா.1 எனது பக்கத்து ஊர்க்காரர். அவரை தெரியும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு அ.சா.1 ன் தம்பி செந்தில்குமார் போன் செய்து முக்கியமான விசயம் கொஞ்சம் வாங்க மாமா என்று சொன்னார். தேவானூர்புதூர் மெயின் ரோட்டிற்கு சென்றேன். நான் சென்றபோது அங்கு யாரும் இல்லை. அ.சா.1 க்கும், எதிரிகளுக்கும் சண்டை என்று கேள்விபட்டேன். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பை ஆதரிக்காததால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையின் போது 27.06.2020 ம் தேதி மாலை செந்தில்குமார் எனக்கு போன் செய்து நெசவாளர் காலனி பின்புறம் உள்ள காட்டிற்கு வரச்சொன்னார். நான் அங்கு சென்றேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பின்பு மாலை 04.30 மணியளவில் அ.சா.1 அங்கு ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார்

**என்றும், ஆஜர் எதிரியும், அஜயும் கத்தி மற்றும் குச்சியுடன் வந்து அ.சா.1 ஐ பார்த்து ஆபாச வார்த்தைகளால் திட்டி, கையில் வைத்திருந்த குச்சியால் அ.சா.1ன் இடது முன் கையில் அடித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதை பார்த்த நானும், செந்திலும் சென்று சண்டையை விலக்கினோம் என்றும், அ.சா.1 ஐ பார்த்து எதிரிகள் கத்தியை காட்டி கொன்றுவிடுவோம் என்று மிரட்டிச்சென்றார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது உண்மையை மறைத்து எதிரி அஜய் எனக்கு தெரிந்தவர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்